# சீர்காழி நகராட்சி



**2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16–ஆம் தேதி நாள்: 16.08.2024 வெள்ளிக்கிழமை மதியம் 3.30 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சாதாரண கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்கள் ஏல நிபந்தனை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 326 பிரிவின்படியும் 04.04.1938-ம் தேதிய உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண் 1216 மற்றும் 22.07.2001-ம் தேதிய உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண் 1915-ல் கண்டுள்ள விதிகள்3(4)ன் படியும், அரசு ஆணை எண்: 181 நாள் 19.09.2005-ன் படியும், 01.04.2024 முதல் 31.03.2027 வரை மூன்றாண்டு காலத்திற்கு கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமத்திற்கான பொதுஏலம்/ஒப்பந்தபுள்ளிகள் கோர செலுத்த வேண்டிய பொறுப்புத்தொகை கூடுதல் வைப்புத்தொகை திருத்தியமைக்க நகர்மன்ற மன்றத்தினால் தீர்மானம் எண் 1074 நாள்:16.02.2024 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் பொதுஏலம்/ஒப்பந்தபுள்ளிகள் கடந்த 29.02.2024 அன்று கோரப்பட்டும் 06.03.2024 மற்றும் 13.03.2024 அன்று மறு ஏலம்/ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் (மூன்றாவது மறு ஒப்பந்தபுள்ளியில்) பழைய பேருந்து நிலையம் கட்டணக்கழிவறை ஒப்பந்தபுள்ளியினை அரசு நிர்ணயம் செய்த தொகையினைவிட கூடுதலாக வரப்பெற்றதனால் ஏற்கப்பட்டது.<br>மேலும் 20.06.2024, 26.06.2024, 04.07.2024 மற்றும் 11.07.2024 ஆகிய நாட்களில் மீதம் உள்ள 4 இனங்களுக்கான மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (7-வது மறு ஒப்பந்தபுள்ளியில்) புதிய பேருந்து நிலையம் கட்டணக்கழிவறை அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை விட கூடுதலாக வரப்பெற்றதனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>மீதம் உள்ள 3 இனங்களும் பொறுப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை அதிகம் உள்ளதனால் 7-வது முறையாகவும் மறு | தீர்மான எண்:1152<br>நாள்: 16.08.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி எவரும் வரவில்லை என நகர்மன்ற தலைவர் பொறுப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை திருத்தி அமைக்க அறிவுறுத்தியதன்பேரில் பொறுப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை கீழ் கண்டுள்ளவாறு திருத்தி அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல இனங்களின் விபரம் | 16.02.2024ல் நகர்மன்ற தீர்மானத்தின் படி திருத்தி அமைக்கப்பட்ட பொறுப்புத் தொகை ரூ | 16.02.2024ல் நகர்மன்ற தீர்மானத்தின் படி திருத்தி அமைக்கப்பட்ட கூடுதல் வைப்புத் தொகை ரூ | தற்போது ஒப்பந்தபுள்ளி கோர செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ரூ | தற்போது ஒப்பந்தபுள்ளி கோர செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை ரூ | மின் வைப்பு தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | முருகன் பூங்கா கட்டக்கழிவறை | 2,00,000/- | 1,00,000/- | 1,50,000/- | 75,000/- | 5,000/- |
| 2 | 1920 ஆம் ஆண்டு நகராட்சிகளின் சட்டம் 270 வது பிரிவின் கீழ் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000/- | 2,00,000/- | 2,00,000/- | 1,00,000/- | - |
| 3 | நகராட்சி எல்லைக்குள் வந்து செல்லும் யாத்தீரிகர்கள் ஊர்திகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000/- | 2,00,000/- | 1,50,000/- | 1,00,000/- | - |

<u>அலுவலகக்குறிப்பு</u>: நகர்மன்ற தீர்மானம் எண் 1074 நாள்:16.02.2024ன் படி பொறுப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கியதனால் மேற்கண்ட குத்தகை இனங்கள் ஏலமோ, ஒப்பந்தப்புள்ளிகளோ, கோரி எவரும் வரவில்லை. எனவே மேற்கண்ட அட்டவணையின்படி பொறுப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை மீண்டும் திருத்தி வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: **2851/2023/அ1.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-2 | சீர்காழி நகராட்சி வார்டு எண்–09 துறையூர் செல்லும் பிரதான சாலையில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து சேதமடைந்த நிலையில் பொது மக்கள் பயன்படுத்த இயலாமல் உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமபடுவதால் 9 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும், நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் அறிவுரையின் படியும் மேற்படி பாலத்தினை இடித்து புதியதாக சிறு பாலம் அமைத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.60,000/–** க்கு நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 409/2024/இ1/1. | தீர்மான எண்:1153<br>நாள்: 16.08.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டரை இயக்க இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr,No.539/2005/F.3 நாள்,28.1.2005–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் கடித ந.க.எண்–3319/2023/ஈ1, நாள்–09.06.2023 ன் விலை விகிதத்தின்படி மின்மோட்டார்களை இயக்குவதற்கும்–10 நபர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள்–2 நபர்கள் ஆக கூடுதல் 12 நபர்களை தற்காலிக பணியாளர்களாக 01.03.2024 முதல் 30.08.2024 6 மதங்களுக்கு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் இந்நகர்மன்ற தீர்மான எண்–1099, நாள்–16.02.2024 ன் படி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் இதே விலை விகிதத்தில் ஒப்பந்ததாரருக்கு 01.09.2024 முதல் 28.02.2025 6 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்தும், செலவின தொகை **ரூ.11,30,400/–** மற்றும் (ESI மற்றும் EPF **ரூ.1,46,952/–)** ஆக கூடுதல் தொகை **ரூ.12,77,352/–** நகராட்சி குடிநீர் திட்ட நிதி / பொதுநிதியிலிருந்து தொகை வழங்கி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்568/2020/இ1. | தீர்மான எண்:1154<br>நாள்: 16.08.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம், மின் மோட்டார் அறை, நகர்மன்ற கட்டிடம், சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையம், MCC மையங்கள் மற்றும் அம்மா உணவகம் ஆகிய இடங்களில் புதிய மின் விளக்குகள், மின் விசிறி மற்றும் மின் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து பொறுத்திட ஆகும் உத்தேச செலவினம் **ரூ.75,000/–** ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:1155<br>நாள்: 16.08.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை உள்ளூர் நிறுவனங்களில் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **2811/2024/இ1/5.** | |
| பொருள் எண்-5 | சீர்காழி நகராட்சி குடிநீர் திட்ட நிதி **2024–25** ன் கீழ் பாராளுமன்ற தேர்தல்–**2024** வாக்குச்சாவடி மையங்களில் தேவையான குடிநீர், மின் விளக்கு, மின் விசிறி, டேபிள், நாற்காலி மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும் பணி நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி தேர்தல் நடை முறைகள் அமுலில் இருந்ததால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி பெற்று திருமதி.T.ஜீவா, ஒப்பந்ததாரரின் மூலம் பணி மேற்கொண்டதையும், நகராட்சி பொது நிதியியிருந்து பட்டியல் தொகை **ரூ.79,730/–** ஐ வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **784/2024/இ1.** | தீர்மான எண்:**1156**<br>நாள்: **16.08.2024**<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-6 | சீர்காழி நகராட்சி குடிநீர் திட்ட நிதி **2024–25** ன் கீழ் சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையம் ஆற்று கிணற்றில் உள்ள **15** HP நீர்முழுகி மோட்டார் பழுது நீக்கம் செய்யும் பணி பொது மக்களின் நலன் கருதியும், குடிநீர் அத்தியாவசிய பணியாக உள்ளதால் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுறையின்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சிகளின் சட்டம் **2022** பிரிவு **57(7)** ன் கீழ் விலைப்புள்ளி பெற்று J.K Electrical & Engineering Works, 127-C Durgalaya Road, Thiruvarur-610001. நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டதையும், நகராட்சி குடிநீர் திட்ட நிதியியிருந்து பட்டியல் தொகை **ரூ.43,316/–** ஐ வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **2811/2024/இ1.** | தீர்மான எண்:**1157**<br>நாள்: **16.08.2024**<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-7 | சீர்காழி நகராட்சி குடிநீர் திட்ட நிதி **2024–25** ன் கீழ் சீர்காழி நகராட்சி வார்டு **9** கோயில்பபத்து மற்றும் வார்டு **21** துறையூர் ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் புதிய தாக **2** எண்ணிக்கை **3** HP நீர்முழுகி போர் மோட்டார்கள் விநியோகம் செய்து பொறுத்திதரும் பணி பொது மக்களின் நலன் | தீர்மான எண்:**1158**<br>நாள்: **16.08.2024** |

| | | |
|---|---|---|
| | கருதியும், குடிநீர் அத்தியாவசிய பணியாக உள்ளதால் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுறையின்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் விலைப்புள்ளி பெற்று J.K Electrical & Engineering Works, 127-C Durgalaya Road, Thiruvarur-610001. நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டதையும், நகராட்சி குடிநீர் திட்ட நிதியியிருந்து பட்டியல் தொகை **ரூ.1,28,786/–** ஐ வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **2811/2024/இ1/1.** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-8 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி மண்டல இயக்குநர் தஞ்சாவூர், மற்றும் மாவட்ட சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநர் மயிலாடுதுறை ஆகிய உயர் அலுவலர்களுக்கு தினந்தோறும் தற்காலிக DBC பணியாளர்களால் கொசு புழுக்கள் அழித்தல், முதிர் கொசுக்களை அழித்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் DBC (Domestic Breeding Checkers) பணியாளர்கள் மற்றும் பணியின் விவரத்தை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து தெரிவித்து வேண்டியுள்ளது.<br>எனவே எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக நகராட்சியில் 32 டெங்கு களப்பணியாளர்கள் நோய் தடுப்பு பணிக்காக அமர்த்தி 19.02.2024 முதல் 19.08.2024 வரை 6 மாதங்களுக்கு டெங்கு தடுப்பு பணிகள் General Contract Company (VNP SIVAKUMAR Proprietor) என்ற நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் டெங்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி 19.08.2024 ஒப்பந்த காலம் முடிவடைவதால் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக அவசர அவசியம் கருதி 32 எண்ணிக்கை பணியாளர்களை டெங்கு பணிகள் 20.08.2024 முதல் 19.11.2024 வரை 3 மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3391/2023/ஈ1 நாள்.09.06.2023 ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.490/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் (EPF-13%) நாள் ஒன்றுக்கு ரூ.554/- வீதம் 32 நபர்களுக்கு ஒரு மாத கால ஊதியம் **ரூ.5,31,840/-** ஆகும். எனவே டெங்கு தடுப்பு பணி மேற்கொள்ள 20.08.2024 முதல் 19.11.2024 வரை 3 மாதங்களுக்கு உத்தேச செலவீனத்தொகை **ரூ.15,95,520/-** ஆகும். எனவே பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு பணிகள் 3 மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் | தீர்மான எண்:1159<br>நாள்: **16.08.2024**<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அதற்காகும் செலவீனத்தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 1481/2024/எச்1 | |
| பொருள் எண்-9 | சீர்காழி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் பொறியியல்பிரிவு கணினி உதவியாளர்கள் 3 நபர்கள் மற்றும் ஆணையர், பொறியாளர் LCV வாகனத்தை இயக்குவதற்கு 3 ஓட்டுநர்கள் 19.02.2024 முதல் 19.08.2024 வரை 6 மாதங்களுக்கு General Contract Company (VNP SIVAKUMAR Proprietor) என்ற நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி 19.08.2024 ஒப்பந்த காலம் முடிவடைவதால் அவசர அவசியம் கருதி 6 எண்ணிக்கையிலான பணியாளர்களை 20.08.2024 முதல் 19.11.2024 வரை 3 மாத காலத்திற்கு பணிகாலம் நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3391/2023/ஈ1 நாள்.09.06.2023 ஆம் தேதிய உத்தரவில் குறிப்பிட்டுள்ள, விலை விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.600/- வீதம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் (EPF-13%) நாள் ஒன்றுக்கு ரூ.678ஆகும். மேலும் பணிகள் மேற்கொள்ள 6 நபர்களுக்கு ஒரு மாத கால ஊதியம் ரூ.1,22,040/-ஆகும்.<br>எனவே தற்காலிக தினக்கூலி அடிப்படையில் 20.08.2024 முதல் 19.11.2024 வரையிலான 3 மாதங்களுக்கு உத்தேச செலவின தொகை ரூ.3,66,120/-ஆகும். எனவே பொதுசுகாதாரப்பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் பொறியியல்பிரிவு கணினி உதவியாளர்கள் 3 நபர்கள் மற்றும் ஆணையர், பொறியாளர் LCV வாகனத்தை இயக்குவதற்கு 3 ஓட்டுநர்கள் 6 மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவீனத்தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 2766/2024/எச்1. | தீர்மான எண்:1160<br>நாள்: 16.08.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.<br>திருத்தம்:<br>அதே விலைவிகிதத்தில் பணிகள் 3மாதத்திற்கு மேற்கொள்ளலாம் |
| பொருள் எண்-10 | அரசாணை எண்.21, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MC II) நாள்.11.02.2024 மற்றும் அரசாணை (4D) எண்.2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.02.2021 -ன்படி<br>இந்நகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு ஓராண்டிற்கு கீழ்கண்ட விபரப்படி உத்தேச செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>1) அரிசி பொருட்கள் – 19,800<br>2) மளிகைப் பொருட்கள் –12,00,000 | தீர்மான எண்:<br>நாள்: 16.08.2024<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.<br>அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் |

| | | |
|---|---|---|
| | 3) பால் பொருட்கள் – 245000<br>4) சிலிண்டர் உருளைகள் – 4,80,000<br>5) ஊதியம் – 14,40,000<br>6) காய்கறி – 2,40,000<br>7) பதிவேடுகள் மற்றும் டோக்கன்கள் – 4,00,000<br>40,24,800<br>மேற்கண்டவாறு **2024-2025-ம்** நிதியாண்டிற்கு செலவினங்கள் **ரூ.40,24,800/-** வருவதில் உணவு பொருட்கள் விற்பனை செய்வதன் மூலம் வருவாய் **ரூ.12,96,000/-** தொகை போக கூடுதல் செலவினம் **ரூ.27,28,800/-** ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 5415/2015/அ.1 | கோரிக்கையின்படி தற்போது உள்ள மகளிர் சுயஉதவிக்குழுவினை மாற்றி வேறு ஒரு குழுவினை மேற்கொள்ள மன்றம் தீர்மானித்தது. அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. |
| பொருள் எண்-11 | சீர்காழி நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சி கட்டண கழிப்பறை கட்டிடம் கட்டப்பட்டு சுமார் **15** ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தற்போது கழிவறை கட்டிடத்தில் உள்ள கதவுகள், கழிவு நீர் மற்றும் தண்ணீர் குழாய்கள், கட்டிட மேல் தள ரூப்புகள், தரைகள் ஆகியவை சேதமடைந்துள்ளதை பராமரிப்பு பணி மேற்கொள்ள **ரூ.11.00இலட்சத்திற்கு** இந்நகர்மன்ற தீர்மான எண்–1120, நாள்–24.07.2024 ன் படி அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி தீர்மானத்தை ரத்து செய்து நகராட்சியின் நிதி நிலமையினை கருத்தில் கொண்டு குறைந்த செலவில் பராமரிப்பு பணி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு **ரூ.5.00 இலட்சத்தை** நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**:மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:2812/2024/இ1. | தீர்மான எண்:1162<br>நாள்: **16.08.2024**<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-12 | சீர்காழி நகராட்சி பகுதியில் கீழ்கண்ட பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்பிளை புறனமைப்பு செய்து புதுப்பித்திட தயார் செய்த உத்தேச மதிப்பீடு **ரூ.20,000/–** ஐ Dhivisha mari Constructions, நிறுவனத்திடம் ஒப்படைப்பு பணியாக செய்யவும், மேற்படி பணிக்கு நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1. நகராட்சி அலுவலக கட்டிட பின்புறம்.<br>2. பிடாரி தெற்கு வீதி.<br>3. தேர் தெற்கு வீதி.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:2811/2024/இ1/4. | தீர்மான எண்:1163<br>நாள்: **16.08.2024**<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-13 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு-A, பிளாக்-50, சர்வே எண்:428 மற்றும் 429 உள்ள ஜெகநாதபுரம் மனைபிரிவு ஒப்புதல் தொடர்பாக, திருமதி.கலைசெல்வி/ஜெயபால் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.NO:21035/2024 நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு, அதில் 1.நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள், 2.ஆணையர், சீர்காழி அவர்கள் 3.மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை அவர்கள் 4.வட்டாட்சியர், சீர்காழி அவர்கள் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக எதிர்வாதிரை செய்ய சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பு அரசு வழக்கறிஞர் (MAWS) திரு.DR.T.சீனிவாசன் அவர்களுக்கு வழக்காடு கட்டண தொகை ரூ.20,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1651/2024/எப்1 | தீர்மான எண்:1164<br>நாள்: 16.08.2024<br>அலுவலகக் குறிப்பு ஒத்திவைக்கப்படுகிறது. |

நாள்: 13-08-2024
இடம்: சீர்காழி

நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி